செய்தி வெளியீடு எண். 06/2026 நாள் : 01.10.2026

<u>செய்தி வெளியீடு</u>

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியினை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர்

திரு. **தர்மேந்திர பிரதாப் யாதவ்,** இ.ஆ.ப., மற்றும்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்

டாக்டர் **மா. ஆர்த்தி,** இ.ஆ.ப., ஆகியோர் துவக்கி வைத்தனர்.

**********************************

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களின் பயனாக தமிழ்நாட்டில் ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படும் சுய உதவிக் குழுவினர் பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர். சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக நவராத்திரியை முன்னிட்டு, சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் நடைபெறும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியினை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் மா. ஆர்த்தி, இ.ஆ.ப., ஆகியோர் இன்று (01.10.2026) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்வையிட்டனர்.

தொடர்ந்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களும், 10 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 1.42 கோடி வங்கிக் கடன் இணைப்பும், சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களுக்கு மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாயும் தனிநபர் கடனாக வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

01.10.2026 முதல் 15.10.2026 வரை 15 நாட்கள் நடைபெறும் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் வழிகாட்டுதலில் செயல்படும் 70க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களான கொலு பொம்மைகள், பூஜைப் பொருட்கள், பட்டு, பருத்தி புடவைகள், வேஷ்டிகள், ஆயத்த ஆடைகள், போர்வைகள், துண்டுகள், மரம் மற்றும் சுடுமண் சிற்பங்கள், கைவினைப் பொருட்கள், மண்பாண்டங்கள், சணல், காகிதம், பனைஓலை, வாழைநார், தேங்காய் ஓடு ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட கலைப்பொருட்கள், அழகிய பைகள், செயற்கை ஆபரணங்கள், சிறுதானியங்கள், மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள், சுவை மிகுந்த தின்பண்டங்கள், இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட மரச்செக்கு எண்ணெய்கள், தேன், தேநீர், காபி பொடி, பனை வெல்லம், நெய், ஊறுகாய், வத்தல், வடகம் முந்திரி, வீட்டு தயாரிப்பு சாக்லேட்டுகள், ஊட்டி வர்க்கி, 90களில் நினைவுகளை மீண்டும் கொண்டு வரும் பாரம்பரிய சுவை கொண்ட மிட்டாய் வகைகள், ஜூஸ் மற்றும் சிப்ஸ் வகைகள், யூகலிப்டஸ் தைலம், திரிகடுகம் உள்ளிட்ட மூலிகைப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் மற்றும் வீட்டு அலங்கார கைவினைப் பொருட்கள் என 100க்கும் மேற்பட்ட பொருட்கள் ஒரே இடத்தில் 50 அரங்குகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அறுசுவை மிகுந்த பாரம்பரிய உணவுகளை உண்டு மகிழ்வதற்கென தனி அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. தினசரி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம். இலவச வாகன நிறுத்துமிடம் உள்ளது.

இத்தகைய சிறப்பு மிகுந்த நவராத்திரி விற்பனைக் கண்காட்சிக்கு அனைவரும் வருகை தந்து, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் தரமான பொருட்களை வாங்கிப் பயனடைவதோடு மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:**
**மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தமிழ்நாடுமகளிர்மேம்பாட்டுநிறுவனம், சென்னை–34.**

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள :

TncdwH tncdwofficial TncdwState shgmedia www.tncdw.org